உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சோபகிருது வருடம் ஆனி திங்கள் ஜீன் 2023 | பூமி–04



## காலத்தின் தேவையாகியுள்ள தனியார் பல்கலைக்கழகங்கள்



இலங்கைத் தமிழர்கள் கல்வியால் பெற்ற நன்மைகள் அதிகம். இலங்கைத்தமிழர்களை நீண்ட காலமாக அடையாளப்படுத்தியது அவர்களது கல்வியறிவே! இன்று இலங்கையில் பதினெட்டு பல்கலைகழகங்கள் உருவாகியிருந்தாலும், தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கற்கும் தொகை மிகவும் அருகி வருகின்றது. சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற தேசிய பாடசாலை மாணவர்களை நாம் கருத்தில் கொண்டு, தமிழ் மாணவர்கள் உச்சமாக கற்கிறார்கள் என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்கின்றோம். என்றாலும் பாடசாலை இடைவிலகலிலும் க. பொ.த உயர்தர பரீட்சையை ஒரு தடவைக்கு மேல் எடுக்காமல் விடுபவர்கள் என்ற வகையிலும் தமிழ்

தொடர்ச்சி 02ம் பக்கம்

மாணவர்கள் இன்று முன்னணி வகிக்கிறார்கள். பல மாணவர்கள் பல்கலைகழக அனுமதிக்கான உயர்தர பரீட்சையை மூன்று தடவைகள் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதிலும் அதை பயன்படுத்திக்கொள்வதில்லை. இந்நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. புலம்பெயர் தேசங்களுக்குப் போனவர்களுடைய அழைப்பை ஏற்று இந்நாட்டில் கல்வியை தொடராமல் தங்களது ஆற்றலை அறிவை சரியாகப் பயன்படுத்தாமல் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குப் போவதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்த நிலையை மாற்றுவதற்கு கல்விமான்கள் நிதி வசதி உளள்வர்கள் திட்டமிட்டு செயற்பட வேண்டும். குறிப்பாக இலங்கையில் கல்வி முதலீடு என்பது வாய்ப்பாக அமைந்துள்ளது. அதாவது தனியார் பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கம் தாராளமாக அனுமதி வழங்கிக் கொண்டிருக்கின்றது. தென்னிலங்கையில் பல தனியார் பல்கலைகழகங்கள் உருவாகின்றன. குறிப்பாக இங்கிலாந்தில் உள்ள பல்கலைகழகங்களும் இந்தியாவில் உள்ள பல்கலைகழகங்களும் வேறுசில நாடுகளில் உள்ள கிளைகளும் கொழும்பிலே திறக்கபட்டு பல பட்டதாரிகள் வெளியேறி வருகிறார்கள். அவர்களுக்கு உயர்ந்த வேதனத்தோடு வேலை கிடைப்பதை நாம் அறிகிறோம்.

அந்த வகையில் இப்பொழுது சிலிற் என்று சொல்லப்படுகின்ற அரசும் தனியாரும் இணைந்த பல்கலைகழகம் பல ஆயிரம் மாணவர்களை உள்வாங்கி அவர்களை விஞ்ஞான துறையில் உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். அங்கு கற்றவர்கள் உயர்ந்த வேதனத்தோடு உடனடியாக வேலையில் சேருகின்றனர். இந்த பல்கலைகழக முறை யாழ்பாணத்திலும் இப்பொழுது ஆரம்பமாகி உள்ளது. தனியார் ஒருவர் கந்தர்மடத்தில் ஒரு பல்கலைகழத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். சில மிசனரிகள் இதில் ஆர்வம் காட்டுகின்றனர். கொழும்பில் இப்பொழுது சின்மயா மி‘ன், இராமகிரு‘ண மி‘ன் போன்றவை இந்த விடயத்தில் அக்கறை செலுத்தியுள்ளனர்.


வடக்கு கிழக்க மலையகத்தில் க.பொ.த உயர்தர பரீட்சை எடுத்து ஒருசில புள்ளிகளாலேயே பல்கலைகழகம் கிடைக்காத மாணவர்கள் பலர் தங்களுடைய வாழ்வாதார முயற்சிகளில் அதிகம் அக்கறை கொள்ளாது, நாட்டினுடைய அசாதரண சூழ்நிலையிலே போதை வஸ்துகளுக்கும் வேறு வேற இடையூறுகளுக்கும் ஆட்பட்டுபோய் இருக்கின்றனர். இந்த நிலையிலே வடக்கு கிழக்கு மலையகத்தை சேர்ந்த மாணவர்களை மேசையிலே இருத்தி, அவர்களுடைய திறமைகளை ஒருங்கே பெற்று, அவர்களை ஒரு யதார்த்தமான பட்டதாரிகளாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனை புலம்பெயர்ந்து தொழிலதிபராக இருப்பவர்களும், சிங்கபூர், மலேசியா போன்ற நாடுகளிலே மிகச்செல்வத்தோடு இருக்கின்ற தமிழர்களும், வடக்கு கிழக்க மலையகத்திலே தனியார் பல்கலைகழகம் நிறுவுவதில் அக்கறை காட்ட வேண்டும். எமது மண்ணில் படித்து பிற நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களை இயக்குகின்றவர்கள், அந்த பழைய மாணவர் சங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக தாம் சார்ந்த கல்விச்சாலைகளுக்கு அருகில் உயர் கல்விக்கான வாய்ப்புக்களை எவ்வாறு உருவாக்கலாம் என்று திட்டமிடவேண்டும். இதுதான் இன்றைய அத்தியாவசிய தேவை.


**ஆசிரியர்**
கலாநிதி.செஞ்சொற்செல்வர்.
ஆறு.திருமுருகன்
**உதவி ஆசிரியர்**
திரு.ச.சந்தோஷன்
**வடிவமைப்பாளர்**
திரு.வ.குணநீதன்

சிங்கபூர் இப்பொழுது பல்கலைகழக முதலீடுகளை இடுகின்ற காரணத்தினால் சிங்கப்பூரை நோக்கி பல நாட்டு மாணவர்கள் படையெடுத்துக் கொண்டிருக்கின்றனர். யாழ்பாணத்திலும் பல்கலைகழக மருத்தவபீடம் பிறநாட்டு மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்ப எற்படுத்திய காரணத்தினால் இப்பொழுது பரீட்சார்த்தமாக பிறநாட்டு மாணவர்கள் யாழ் பல்கலைகழக மருத்துவ பீடத்திலே சேர்ந்திருக்கின்றனர். இது நல்ல ஒரு எதிர்காலத்தை உருவாக்கியுள்ளது. எனவே இதை திட்டமிட்டு செயற்படுத்த அனைவரும் ஒன்றிணைவோம்.

**கலாநிதி. செஞ்சொற்செல்வர்.**
**ஆறு. திருமுருகன்**
**சிவபூமி பத்திரிகை ஆசிரியர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இணுவையம்பதி பரராசசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த மகோற்சவத்தின் சில முக்கிய பதிவுகள்.







# இளைய தலைமுறை ஆற்றலார் விருது 2023

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செலவர், கலாநிதி.ஆறு.திருமுருகன் பிறந்த நாள் அற நிதியச் சபையின் இந்த ஆண்டிற்கான இளைய தலைமுறை ஆற்றலர் விருது இன்று தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களது 62வது பிறந்த தினத்தினை முன்னிட்டு இவ் விருது வழங்கும் விழா நடைபெற்றது.









பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு அ.சிவபாலசுந்தரம் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை பீடாதிபதி பு.ரவிராஜன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் பல அறிஞர்கள் மற்றும் சமூகப் பெரியவர்கள் தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து இவ் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இவ் விருது வழங்கும் விழாவில் வைத்திய கலாநிதி வேலாயுதப்பிள்ளை அவர்களும் சங்கானை பிரதேச செயலாளர் திருமதி பிறேமினி பெண்ணம்பலம் அவர்களும் இளைய தலைமுறை ஆற்றலார் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# அரசாள்வர் ஆணை நமதே!



செங்கோல் என்பது மன்னனுக்கு மகுடமும், அரியணையும் போன்றே செங்கோலும் இன்றியமையாததாகும்.

மன்னனின் ஆட்சி நேர்மையானதாகவும், நெறி வழுவாததாகவும் அமைய வேண்டும் என்பதன் பொருட்டே செங்கோல் எனும் நேரிய தண்டு அரசன் வீற்றிருக்கும் போதெல்லாம் கையில் காணப்படும்.

செம்மை+கோல் என்பதுவே செங்கோல் என்றாகும் (செம்மை=நேர்மை).



ஒவ்வொரு முறையும் மன்னர் காலத்தில் ஆட்சி மாற்றம் நடக்கும் போது செங்கோலை ஆட்சி இழந்தவர்களிடம் இருந்து அரியணை ஏறுபவர்கள் செங்கோல் பெற்றுவார்கள்.

அந்த வகையில் சைவ ஆதீனங்களின் ராஜகுருவாக விளங்கும் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனம் ,24 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பராமாசாரிய சுவாமிகள் அவர்கள் வழங்கிய, நந்தியெம்பெருமான் பொறிக்கப்பட்ட,செங்கோலை பாரத பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் பாராளுமன்றத்தில் நிறுவினார்கள்.





"தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்,
ஆன சொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே!"
(கோளறுத் திருப்பதிகம்)



இந்தியாவின் சிறப்பு வாய்ந்த ஆதீனங்களில் ஒன்றான தர்மபுர ஆதீனத்தின் “திருப்பணி செம்மல்” விருது செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



திருமுறை ஓதுவார்,கலைமாமணி திரு.முத்து கந்தசாமி தேசிகர் அவர்களின் இறைபதம் குறித்து நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டம் 30.05.2023 நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது.





## பாக்குநீரிணையினை நீந்திக்கடந்தார்

# ஈழத்தமிழன்

28.05.2023 அன்று பாக்குநீரிணையினை நீந்தி கடந்து மட்டக்களப்பு மண்ணிற்கு மட்டுமல்ல ஈழத்தமிழருக்கும் பெருமைசேர்த்தார் வு.மதுரீகன்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லுரியின் பழைய மாணவரான இவர் இச் சாதனையினை புனித மிக்கேல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவில் நிகழ்த்தியிருப்பது சிறப்பம்சமாகும்.

20 வயதுடைய ஜனாதிபதி சாரணர் விருது பெற்ற மதுரீகன் இந்தியாவின் தனு'கோடியில் இருந்து தலைமன்னார் வரையான 30 கிலோ மீற்றர் தூரத்தை 28.05.2023 அதிகாலை நீந்தத் தொடங்கி 28.05.2023 பிற்பகல் 2 மணியளவில் நாட்டின் தலைமன்னாரை வந்தடைந்தார்.





இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க வேண்டும் என்பது நீச்சல் வீரர்கள் பலரினதும் அபிலாஷ'யாக இருந்து வருகின்றது. ஆனால் இதை நீந்திக் கடக்கின்றமை என்பது மிகப் பெரிய சவால் ஆகும்.

ஏனெனில் இந்நீரிணை பூராவும் கடல் பாம்புகள், ஆபத்தான கடல் வாழ் உயிரினங்கள் உள்ளன. இதையும் தாண்டி மட்டக்களப்பை சேர்ந்த இந்த மாணவன் சாதித்திருப்பது பெரிய விடயமே காரணம் இத் தூரத்தை நீந்திக்கடக்க முயன்ற பலர் தோல்வியை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச் சவால்களை முறியடித்து கிட்டத்தட்ட 12 மணித்தியாலங்களுக்கு தொடர்ச்சியாக நீந்தி இலக்கை அடைந்துள்ள மதுசிகனை பாராட்டியே ஆக வேண்டும்.



கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன் அவர்களுடைய 62 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் பலரும் கலந்து கொண்டார்கள். சிவபூமி உறவுகளுடன் தன் பிறந்தநாளை செஞ்சொற்செல்வர் கொண்டாடி மகிழ்ந்தார்.









பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களால் நிர்வகிக்கப்படும் கந்தானை மலைச்சாரலில் வீற்றிருந்து அருள்புரியும் குறிஞ்சிக் குமரப் பெருமானுடைய வைகாசி விசாக உற்சவம் 02/06/2023 அன்று சிறப்பாக நடைபெற்றது.





இந்து கலாச்சாரத்திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த திருமுறை அர்ச்சனை 30.05.2023 அன்று திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெற்றது. குமாரவயலூர் பாலச்சந்திர ஓதுவார் ஆற்றுப்படுத்திய இந்நிகழ்வில் பல அடியவர்கள் கலந்து கொண்டார்கள்.





திருக்கேதீச்சர மகோற்சவ காலத்தில் யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் இறைவழிபாட்டில் பக்திபூர்வமாக ஈடுபடுவதை காணலாம்.





கொழும்பில் சிவபூமி நிலையம் நிறுவுவதற்கு தனது இல்லத்தை அன்பளிப்புச் செய்த ,திருமதி திரவியம் சபாரட்ணம் அம்மையார் கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமத்துக்கு வருகை தந்தார்.











திருமுறிகண்டியில் யு9 வீதியில்
அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வன்னி பிராந்திய அலுவலகம்
ஆறுபடை வீடு திறப்பு விழா 09.06.2023 காலை 9.00 மணிக்கு மிகச்சிறப்பாக நடைபெற்றது.








வரலாற்று சிறப்பு வாய்ந்த இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் 25.05.2023 ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.










தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களைக் கௌரவித்து பிறந்தநாள் அறநிதியச் சபையை உருவாக்கி புதியதோர் அறக்கட்டளையை நிறுவியுள்ளது. ஆண்டுதோறும் எம் மண்ணில் இளைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஆற்றலாளர் இருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு சிறப்பு விருது வழங்கி கௌரவித்தல் என்ற திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அந்தவகையில் 2023ம் ஆண்டுக்கான இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது பெற்ற இருவரில் ஒருவரான வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை ஜெகரூபன் (உளநல வைத்திய அதிகாரி) அவர்களைப் பற்றிய சிறப்புத் தொகுப்பு

வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை ஜெகரூபன்அவர்கள் யாழ் மாவட்டம் நீரிவேலியைச் சேர்ந்தவர். 31.05.1972 கண்டியில் பிறந்தார். தந்தையார் கந்தையா வேலாயுதபிள்ளை ஓய்வுபெற்ற பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரி. தாயார் அமரர் திருமதி ரூபி வேலாயுதபிள்ளை ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தராக இருந்தவர்.



வைத்திய கலாநிதி வே.ஜெகரூபன் அவர்கள் தற்போது பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவில் வசித்து வருவதுடன் குடும்பத்தினருடன் கொழும்பில், தெகிவளையில் வாழ்ந்து வருகிறார். மனைவி திருமதி ஜனித்திரா ஜெகரூபன் அவர்கள் இந்தியாவில் பயின்ற நடனப் பட்டதாரி. குழந்தைகள் மூவர் இரண்டு பெண்பிள்ளைகள், ஒரு ஆண் கொழும்பில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள்

கல்வித்தகைமை

ஆரம்பக் கல்வி (தரம் 01 □ 05) புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணத்திலும் இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வி யா/இந்துக் கல்லூரியிலும் கற்று 1991 இல் க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்து யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் மருத்துவக் கல்வியை நிறைவு செய்து 2000 ஆம் ஆண்டில் MBBS பட்டதாரியாக (Bachelor of Medicine and Bachelor of Surgery) வெளியேறினார். 24.03.2002 இல் சுகாதார அமைச்சில் வைத்தியராக முதல் நியமனம் பெற்று வெவ்வேறு பிரிவுகளில் கடமையாற்றி 21 வருட சேவையை மக்களுக்காக வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பது மிகையல்ல.

மேலதிக தகைமையாக 2010 இல் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (Post Graduate Insititute of Medicine – PGIM) இல் உள மருத்துவத்தின் டிப்ளோமா சான்றிதழ் (Diploma in Psychiatry) பெற்றார். உளநலத் துறையில் (Mental Health) கடந்த 14 வருடங்களாக மருத்துவ அதிகாரியாக மக்களுக்கு சேவை வெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

துறை சார்ந்த வேறு அனுபவங்கள்

முல்லேரியாவ தாதியர் பயிற்சிப்பாடசாலையில் வருகைதரு விரிவுரையாளராக 2010 - 2014 வரை நான்கு வருடங்கள் கடமையாற்றியமை.

வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை ஜெகரூபன்

ஆடீடீளு (ருளைநசளவைல ழக துயககயெ)

Worked as a visiting Lecturer at the School of Nursing Mulleriyawa for four years

Rfhjhu அமைச்சில் 2012 - 2015 வரை வாழ்க்கைத் திறன் பயிற்சியாளராக கடமையாற்றினார்.

Master Trainer for Life Skills at the Education,Training Research Unit of Ministry of Health, Srilanka Since Dec 2012- 2015

சுகாதார அமைச்சின் பிராந்திய உளநல பிரிவின் உளவியல் முதலுதவி முதன்மை பயிற்சியாளராக 2016 - 2019 வரை கடமையாற்றினார்.

Master Trainer for Psychological FirstAid at the Directorate of Mental Health of Ministry of Health Srilanka Since August 2016-2019

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் (NISD) கிளிநொச்சி பயிற்சி மையத்தின் வருகைதரு விரிவுரையாளராக 2016 -2019 வரை கடமையாற்றியமை.

Visiting Lecturer for the National Institute of SocialWork Development, Killinochchi Training Centre Since August 2016-2019

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தில் (ONUR) உள

சமூக பயிற்சியாளர்களின் கள மேற்பார்வையாளராக கடமையாற்றியமை.

Field Surpervisor for the Psychosocial Trainees of ONUR (Office for National Unity and Reconcilliation, Srilanka) 2017-2019

வைத்திய கலாநிதி அவர்கள் கலைத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பதோடு பாடசாலைக் காலங்களில் பாடசாலையில் முன்னணி மாணவனாகவும் திகழ்ந்துள்ளார்.யாழ் இந்துக் கல்லூரியில் சாதாரண தரத்திலிருந்து மாணவத் தலைவராக இருந்து 1990 - 1991 இல் கல்லூரியின் சிரேஸ்ட மாணவத் தலைவராக மாணவர் தலைவர் அணியை வழிநடத்தியிருக்கின்றார்.

பாடசாலை வாழ்க்கையில் தமிழ்ச் சங்கம், பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானச் சங்கம் என்பவற்றில் நிர்வாகசபை உறுப்பினராக இருந்துள்ளார். தமிழ்ச் சங்கத்தில் தலைவராக இருந்ததோடு கவிதை, பேச்சு, பட்டிமன்றம் போன்ற போட்டிகளில் தேசிய மட்டம் வரை சென்று பரிசுகள் பெற்றுள்ளார். 1986 தொடக்கம் 1991 வரை தேசிய மட்டம் சென்று பட்டிமன்ற அணியில் இவரும் இருந்துள்ளார் என்பது பாராட்டிற்குரியது.

இதைப்பற்றி உரையாடும் போது கம்பன் கழகம் நடாத்திய கம்பன் விழாவில் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தலைமை தாங்கிய இளைஞர் அரங்கின் பட்டிமன்ற அணியில் தானும் ஒரு பேச்சாளராக இருந்தார் என்பதை பெருமையுடன் குறிப்பிட்டார். இதைவிட பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை உயரம் பாய்தல், தடைதாண்டல் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகளும் பெற்றுள்ளார்.

இவரைப் பற்றிய சமூக ஆர்வலர்களின் கண்ணோட்டம் 2004 இல் சுனாமி தாக்கிய போது இலங்கையில் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்று முல்லைத்தீவு. 30 வருட உள்நாட்டுப் போரின் இறுதி யுத்தம் முல்லைத்தீவில் நிகழ்ந்ததால் அதிக இழப்புக்களை சந்தித்த மாவட்டம் முல்லைத்தீவு.

கொரோனா, எரிபொருள் தட்டுப்பாடு எனப்பல சவால்கள் வந்ததால் மோசமான பொருளாதார இழப்புக்களை சந்தித்த மாவட்டங்களில் ஒன்று முல்லைத்தீவு. இந்நிலையில் Dr.ஜெகரூபனின் பணிகளை பின்வருமாறு பட்டியலிடலாம்.

1) மக்கள் தங்கள் சுமைகளை இறக்கி வைக்க பொருத்தமான ஆட்களை தேடுவது இயல்பே. அந்த மக்களின் கண்ணீர்க் கதைகளை கேட்கின்ற ஒருவராகவும் பொருத்தமான உளவளத்துணையை வழங்குகின்ற ஒருவராகவும் இவர் இருக்கிறார். (Psychological Support)

2) முல்லைத்தீவு மாவட்டத்தில் பேரூந்து ஓடாத கிராமங்கள் பல உள்ளன. பேரூந்து ஓடும் பாதைகளிலும் ஒரு நாளுக்கு ஒன்று அல்லது 2 சேவைகள் மட்டுமே இடம்பெறுகின்றன. இதனால் மக்கள் வைத்தியசாலைக்கு வந்து போவதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். அதிலும் உளநலம் பாதிக்கப்பட்ட ஒருவரை வைத்தியசாலைக்கு கொண்டு வருதல் மிகச் சிரமம். இந்நிலையில் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வெளியே 20 உளநல கிளினிக்களை நிறுவி மக்களின் சிரமத்தைக் குறைத்துள்ளார்.(Outreach Mental Health Clinics)

3) வைத்தியசாலைக்கு வர முடியாத முதியவர்கள், படுக்கையில் உள்ள நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள், பாரிய உளநோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் முதலியோரின் வீட்டிற்குச் சென்று பார்வையிட்டு பொருத்தமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். (HOME Visit)

4) முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்கள் மற்றும் உளசமூக அமைப்புக்களை பார்வையிட்டு பொருத்தமான உளநல சேவைகளை வழங்குகிறார். (MH Services to Organisations)

5) பாடசாலை மாணவர்களின் உளநலப் பிரச்சினைகள் மற்றும் விசேட தேவையுடைய மாணவர்களின் பிரச்சினைகளை அறிந்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதுடன் தொடர் கண்காணிப்பையும் செய்து வருகிறார். (School Mental Health Work)

6) அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு உளநலத்துடன் தொடர்பான பயிற்சிகளை வழங்கி வருகிறார். (MH Training Programmes)

7) பொது மக்களுக்கு, மாணவர்களுக்கு அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கும் உளநலம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வுகளை தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றார். (Awareness Programmes)

8) மருத்துவ தேவைகளுக்கு அப்பால் சேவைநாடிகளினதும் அவர்களது குடும்பங்களுக்கும் தேவைப்படுகின்ற வாழ்வாதாரம், கற்றல் உபகரணங்கள், சக்கர நாற்காலி, ஊன்றுகோல், மூக்குக் கண்ணாடி போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவைகளை அணுகி பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பவராக இருக்கிறார். (SocialWork)

9) தனது பாடசாலை நண்பர்களின் துணையோடு

சத்தான இலைக்கஞ்சி வழங்கி
வருகிறார். இது காலை ஆகாரம் அருந்தாமல் உளநல கிளினிக்கிற்கு வருபவர்களுக்கு
பேருதவியாக அமைந்துள்ளது.

10) யாழ் இந்து 91 பிரிவின் அனுசரணையில் பூநகரி பிரதேசத்தில் எதிர்கால
தலைமுறையின் நன்மை கருதி பல ஆயிரக்கணக்கான பனம்விதைகள் நட்டமை.

11) சேவைநாடிகளுக்கான அரச வேலைவாய்ப்பு தொடர்பான இலவச வழிகாட்டல்
வகுப்புக்களை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அலுவலகத்தில் முதன்முதலில்
தோற்றுவித்து அவர்களுடன் இணைந்து வளவாளராக கடமையாற்றி நூற்றுக்
கணக்கானவர்களை அரச சேவையில் இணைத்தமை.

இவருடைய தன்னலமற்ற சேவைகளை பாராட்டி 2013இல் மொரட்டுவ
பிரதேசத்தில் உளசமூக பணிக்கான மேல் மாகாண விருது வழங்கப்பட்டது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் இவராற்றிய உள சமூகப்பணியை பாராட்டி
அமெரிக்காவிலிருந்து வெளிவரும் New York Times சஞ்சிகையில் 2018ல் ஒருகட்டுரை
வெளிவந்தது.

After War's End, a long struggle to Patch Invisible wounds in
Srilanka என்ற தலைப்பில்

A government psychiatrist in Srilanka goes door to door in an area scarred by civil
war, doing what ever he can to meet a staggering need for help.

Kilinochchi, Srilanka- one by one the villagers arrive, each carrying a little blue
book that chronicles a history of loss and heart ache.

If bearable their trauma would have remained private , behind the walls of modest
homes in this northern part of Srilanka shaded by coconut trees and often still bearing the
scars of bullets and fire. But it's not.So they come for monthly public counselling,lining up to
see Dr.V.Jegarupan.................

மேற்குறிப்பிட்ட சஞ்சிகையில் தொடர்ச்சியாக அவர் வன்னி மக்களுக்கு ஆற்றிய
உளநல பணியை ஆதாரத்துடன், புகைப்படங்களுடன் வெளியிட்டுள்ளனர்.

இளைய தலைமுறை ஆற்றலாளர் விருதுக்கு பொருத்தமான தெரிவாக வன்னி
மண்ணில் தன்னலமற்ற வைத்திய பணி, ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான
கிலோமீற்றர்கள் பயணம் செய்து நோயாளர்களின் வீடுகளைத் தேடிச் சென்று களப்பணி
நாளாந்த உணவிற்கே அல்லலுறும் மக்களைத் தேடிச்
சென்று வாழ்வாதாரப் பணி போரால்
பாதிக்கப்பட்ட ஆதரவற்ற உளநோயாளிகளின் அடிப்படை தேவைகளை கவனிக்கும் பணி
உளவளவாளர்கள் வரத் தயங்கும் இடங்களிலுள்ள பாடசாலைகளை தேடிச்
சென்று மாணவர்களை ஒன்றிணைத்து வதிவிட ஆற்றுகைப்படுத்தும் கல்விப் பணி வன்னி
மண் முல்லையில் ஒரு உளநோயாளியும் ஆதரவற்று வீதியில் அலையக் கூடாது என்பதை
நடைமுறைப்படுத்திய பணி நண்பர்கள் எதிர்கொள்ளும் உளப்பிரச்சினை தீர்வுகளுக்கு
நாங்கள் இருக்கின்றோம். என்ற அக்கறையுடனான ஆலோசனைப் பணி டொக்டர் என்ற
துளியளவும் மமதையின்றி மக்களுடன் சகஜமாக பழகும் குணப்பணி.

இவை யாவும் இவரோடு பழகியவர்களின் மதிப்பீடு.

இன்றைய தினம் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின்
62வது அகவை பூர்த்தியில் இளைய தலைமுறையினர் ஆற்றலாளர் விருது 2023 இல்
துறைசார்ந்த சேவையுடன் சமூகத்திற்குள் ஊடுருவி சமூக நலன் சார்ந்த சேவையாக
கடந்த 21 வருடங்களாக ஆற்றி வரும் வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை ஜெகரூபன்
அவர்களுக்கு வழங்கி கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம். இவர் மென்மேலும்
பல விருதுகள் பெற்று சமூகத்திற்கு சேவையாற்ற எல்லாம் வல்ல ஸ்ரீதுர்க்காதேவியை
வணங்கி வாழ்த்துகிறோம்.

செஞ்சொற்செல்வர்.கலாநிதி.ஆறுதிருமுருகன்
பிறந்தநாள் அறநிதியச் சபை,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

நன்றி
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

எமது ஆடி மாத இதழில் மற்றய இளம் ஆற்றலாளர் விருது பெற்ற “தாட்சாயிணி” என்ற புனைபெயரில் வலம் வரும் பிரபல எழுத்தாளரும், பிரதேச செயலருமான திருமதி பிறேமினி பொன்னம்பலம் அவர்களின் சிறப்புத் தொகுப்பு இடம்பெறும்.





வரலாற்றுச்சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் வைகாசி விசாக பொங்கல் தீர்த்தமெடுத்தல் நிகழ்வு 30.05.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது.

காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமான தீர்த்தக்குடம் தாங்கிய குழுவின் நடை பவனி,பெருந்தெரு வீதி வழியாக அம்மன் சந்தியை அடைந்து புதறிகுடா ஊடாக ஊற்றங்கரையை அடைந்து, பின் முல்லைத்தீவு பிரதான வீதியூடாக சிலாவத்தை சந்தியை அடைந்து சிலாவத்தை தீர்த்தக்கரை புனித பிரதேசத்தில் தீர்த்தமெடுத்தல் நடைபெற்றது.







"நீறில்லா நெற்றி பாழ்" என்றும் "சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என்றும் உரைக்கின்ற நல்வழி நூலின் கடைசிப் பாடலாக ஔவையார்,
"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும் மூவர் தமிழும் முனிமொழியும் -கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும் ஒருவா சகம் என்று உணர்"
என்கிறார்.
அத்தகைய சிறப்புப் பொருந்திய உலகப் பொதுமறையான திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரின் அவதார தினமாகிய வைகாசி அனுசம் அன்று அவரது ஆலயம் அமைந்துள்ள தென்னிந்தியாவின் மயிலாப்பூரில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.






சங்கிலிய மன்னனின் 404வது சிரார்த்த தினம் அனுட்டிக்கப்பட்டது

நல்லூர் சங்கிலியன் சிலையடியில் 11.06.2023 நடைபெற்ற குறித்த நிகழ்வில் மதகுருக்கள், பேராசிரியர்கள், அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு யாழ்ப்பாண இராசதானியை ஆண்ட தமிழ் மன்னனுக்கு மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தினர்.






மட்டுநகர், செட்டிபாளையம் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய சடங்கு உற்சவத்திற்காக கண்ணகியை தென்னங் குருத்தோலையில் வடிவமைத்த மட்டக்களப்பைச் சேர்ந்த கலைஞர்களுக்கு பலத்த வரவேற்பும் பாராட்டுக்களும் கிடைத்து வருகிறது







பல வருடங்களின் பின்னர் இலங்கை மன்னார் மாவட்டம், திருக்கேதீச்சரத்திருத்தலத்தில் வைகாசிப் பெருவிழா பஞ்சரத பவனி உலா 01.06.2023 அன்று பல அடியவர்களின் அரோகராக் கோசத்துடன் சிறப்புற நடைபெற்றது.









கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமத்தில் 08.06.2023 அன்று திருமிகு.ச.விநாயமூர்த்தி அவர்களின் ஆன்மீகவுரை இடம்பெற்றது. பல அரிய தகவல்களை எமது முதியவர்களுடன் பரிமாறினார்.




தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு.ஆறுதிருமுருகன் அவர்களிற்கு சாவகச்சேரி சங்கத்தானை கந்தசுவாமி ஆலயத்தினர் கடந்த 09.06.2023ம் திகதி 21ம் நூற்றாண்டின் சிவபூமிக் காவலன் எனும் விருது வழங்கி கௌரவித்துள்ளார்கள்.

மலேசியாவின் தைப்பிங் (taiping) பகுதியில் பிரம்மாண்டமாக வீற்றிருக்கும் பச்சையம்மன்.





இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது (ஆனி 2023) ISBN - 978-955-7420-00-4